சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் – புதிய அறிவிப்புகள் 2015–2016 ஆம் ஆண்டு – தரைப் பகுதிகளில் இயங்கி வரும் 89 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் 4500 மாணாக்கர்கள் பயன் பெறும் வகையில் மழை மேலங்கிகள் வாங்கி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண். 12 நாள் 19.01.2016

மன்மத, தைத் திங்கள் 5 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது:–

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். த1/24826/2015, நாள் 28.09.2015.

******

ஆணை :

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் 2015–2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளிக்கையில் 16.09.2015 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

"தரைப்பகுதியில் இயங்கும் 89 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் 4500 மாணாக்கர்கள் மழைக்காலங்களிலும் பள்ளி செல்லும் வகையில் மழை மேல் அங்கிகள் ரூ.32 இலட்சம் செலவில் வழங்கப்படும்."

2. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் விரிவான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார். ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துருவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 1,314 ஆதி திராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் நல விடுதிகளும், 306 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன என்றும், இவற்றில் மொத்தமாக 1,31,754 மாணவ / மாணவியர் தங்கி கல்வி பயின்று வருகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மலை மேல் இயங்கி வரும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்கள் மழைக் காலங்களில் பள்ளிக்கு நனைந்து செல்வதால் அவர்களது உடல் நலம் பாதிக்கப்பட்டு

பள்ளிக்குச் செல்வது தடைபடுகிற காரணத்தால், முதற்கட்டமாக 2014–2015 ஆம் ஆண்டில் மழை மேலங்கிகள் வாங்கி வழங்கப்பட்டது என்றும், அதேபோல் தரைப்பகுதியில் இயங்கி வரும் 89 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்கள் மழைக்காலங்களில் நனையாமல் பள்ளிக்குச் செல்லவும், அவர்களது கல்வி நலன் பாதிக்காத வகையிலும் மழை மேலங்கிகள் வாங்கி வழங்குவது இன்றியமையாததாகிறது என்றும் ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. எனவே, தரைப் பகுதிகளில் இயங்கி வரும் 89 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் 4,500 மாணாக்கர்களுக்கு, ஒரு மழை மேலங்கி ரூ.700/– என்ற அடிப்படையில், 4,500 மழை மேலங்கிகளை திறந்தவெளி ஒப்பந்த முறையில் வாங்கி வழங்க ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்குமாறும், இதன் பொருட்டு செலவினமாக ரூ.31,50,000/– ( ரூ.700 x 4500 ) ஒப்பளிப்பு செய்யுமாறும் ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், 2015–2016 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், தரைப் பகுதிகளில் இயங்கி வரும் 89 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் 4,500 மாணாக்கர்கள் பயன் பெறும் வகையில், 4,500 மழை மேலங்கிகளை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு வாங்கி வழங்க ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

> இத்திட்டத்திற்கென வாங்கப்பட வேண்டிய மழை மேலங்கிகள் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிச் சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000–இன்படி விதிகளை அனுசரித்து வாங்கப்பட வேண்டும். நிறுவனத்தால் நிர்ணயிக்கப்படும் விலை தோராய விலைக்கு கூடுதலாக இருக்கும் பட்சத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மழை மேலங்கிகள் கொள்முதல் செய்யப்பட வேண்டும். அதே சமயத்தில் விலை குறைவாக இருக்கும் பட்சத்தில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் மழை மேலங்கிகளை வாங்கிவிட்டு மீதத் தொகையினை அரசுக்கு சரண் செய்யப்படுதல் வேண்டும்.

மேலும், ஒரு மழை மேலங்கியின் அலகு விலை ரூ.700/– என்ற அடிப்படையில், 4,500 மழை மேலங்கிகள் வாங்கி வழங்குவதற்கான செலவினமாக ரூ.31,50,000/– (ரூபாய் முப்பத்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> " 2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 277 – கல்வி I திட்டத்தில் சேராதது AA பள்ளிகள் – 24 பொருட்களும் வழங்கலும்
> (த.தொ.கு. 2225 02 277 AA 2408) "

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு 'புதுப்பணி' குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது –1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை

மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A"யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு–செலவு பொது –1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர் ஆதி திராவிடர் நலன் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தினை 2015–2016ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய விளக்கக் குறிப்பினை நிதித் (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர் ஆதி திராவிடர் நலன் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. தரைப்பகுதியில் இயங்கும் 89 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் 4500 மாணாக்கர்களுக்கும் மழை மேலங்கிகள் வாங்கி வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை தவறாமல் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை, அலுவல் சார்பற்ற எண்.1387/ஆதி(ம)பந/2016–1, நாள் 14.01.2016–இல் நிதித் துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1940 (ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை– 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன்,சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35 (பெயரில்)

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசுச் செயலர் அவர்களின் முதுநிலைத் தனிச் செயலாளர், சென்னை – 9.
நிதி (ஆதி (ம) பந / வரவு–செலவு பொது I (ம) II) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 19/1/16